**கவனிக்க.-** *2022.04.01 ஆந் திகதிய 2225 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பகுதி* II *மற்றும் பகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2223 - 2021 අප්‍රේල් මස 09 වැනි සිකුරාදා - 2021.04.09**

*2223 ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III – காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 102 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 106 |


**கவனிக்க.-** (i) *சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்ட மூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

101 - B 082223 - 353 (2021/04)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஜஹுஃபர்தீன் றழியுதீன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1987.01.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/ ப்ர/ 18733 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பதவிய-பராக்கிரமபுர தெற்கு எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே சோமதாச என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 301/ 190 ஆம் இலக்கத்தின் கீழ் 1998.05.25 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பிறிதொருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக சட்டமுறையான உரித்தாளர் இல்லாமை அல்லது சட்டமுறையான உரித்தாளர் இருந்தும் அவர் உரித்தாளராவதற்கு விரும்பாமை அறியக்கிடைத்துள்ளமை காரணமாக இக்குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.04.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

### அட்டவணை

*அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் வடகோரளைப்பற்றில்/ கோரளையிலுள்ள 31ஏ ஆம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதவிய-பராக்கிரமபுர தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு T. P. P. 20 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு - ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு - இரேகை வரைதாளில் 2915 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் சைபர் ஏக்கர் மூன்று றூட் முப்பத்தேழு பேர்ச் (0ஏ. 3றூ. 37பே.) விஸ்தீரணமுள்ளதும் கீழுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு, மேட்டுக்காணி-*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 2921 ;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 2916 ;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் 2906 ;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 2914.*

*ஜஹுஃபர்தீன் றழியுதீன்,*
*பிரதேச செயலாளர்,*
*பதவிய.*

*பிரதேச செயலகம்,*
*பதவிய,*
*2020, நவெம்பர் 19.*

*04-194/ 1*

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஜஹுஃபர்தீன் றழியுதீன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986.08.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/ ப்ர/ 11912 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பதவிய-பராக்கிரமபுர தெற்கு எனும் முகவரியில்*

வசிக்கும் அலுத்கமராலலாகே சுபசிங்க என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 15/ 18 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.08.20 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பிரிதொருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக சட்டமுறையான உரித்தாளர் இல்லாமை அல்லது சட்டமுறையான உரித்தாளர் இருந்தும் அவர் உரித்தாளராவதற்கு விரும்பாமை அறியக்கிடைத்துள்ளமை காரணமாக இக்குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.04.26 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் வடகோரளைப்பற்றில்/ கோரளையிலுள்ள 31ஏ ஆம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதவிய-பராக்கிரமபுர தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு T. P. P. 20 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு - ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு - இரேகை வரைதாளில் 1687 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஒரு ஏக்கர் சைபர் றூட் மூன்று பேர்ச் (1ஏ. 0றூ. 3பே.) விஸ்தீரணமுள்ளதும் கீழுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு, மேட்டுக்காணி-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1688 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1689 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1688 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1688.

ஜஹூபர்தீன் றழியுதீன்,
பிரதேச செயலாளர்,
பதவிய.

பிரதேச செயலகம்,
பதவிய,
2020, செத்தெம்பர் 23.

04-194/ 2

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஜஹூபர்தீன் றழியுதீன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986.07.21 ஆந் திகதி வழங்கப்பட்ட அனு/ ப்ர/ 11742 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பதவிய-பராக்கிரமபுர தெற்கு எனும் முகவரியில் வசிக்கும் அலுத்கமராலலாகே சுபசிங்க என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 13/ 4576 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.03.03 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பிரிதொருவர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக சட்டமுறையான உரித்தாளர் இல்லாமை அல்லது சட்டமுறையான உரித்தாளர் இருந்தும் அவர் உரித்தாளராவதற்கு விரும்பாமை அறியக்கிடைத்துள்ளமை காரணமாக இக்குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.04.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் வடகோரளைப்பற்றில்/ கோரளையிலுள்ள 31ஏ ஆம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதவிய-பராக்கிரமபுர தெற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு T. P. P. 20 ஆம் இலக்க வெளிக்களத்தாளில்

- என்பவரால் தயாரிக்கப்பட்டு - ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு - இரேகை வரைதாளில் 2135 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் மூன்று ஏக்கர் சைபர் றூட் முப்பத்துநான்கு பேர்ச் (3ஏ. 0றூ. 34பே.) விஸ்தீரணமுள்ளதும் கீழுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு, வயற்காணி-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 2134 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 2136 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 2035 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 2129.

ஜஹுபர்தீன் றழியுதீன்,
பிரதேச செயலாளர்,
பதவிய.

பிரதேச செயலகம்,
பதவிய,
2020, செத்தெம்பர் 23.

04-194/ 3

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபை எல்லைக்குள் அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் பிஹிலி எலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.06.23 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அனு/ ராஜா/ பி/ 2539 இன் உரித்துக்காரரான நிலப்பகுதி 13, வலதுவரை, ராஜாங்கனையில் வசிக்கும் நாகஹவத்த ஆரச்சிகே தொன் ஹென்டிரிக் அப்புஹாமி என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டக் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 2606 இன் கீழ் 1982.08.23 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின்கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வுகூறல் இருப்பின் அதுபற்றி 2021.04.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தரவும்.

### அட்டவணை

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம் பளாத்த மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விலச்சி கோரளே தெற்கு, 5பீ, கிராமசேவை அலுவலரின் பகுதியில் உள்ள நிலப்பகுதி 13, வலதுகரை, ராஜாங்கனை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், 01 ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இ. கு. வ. இ. 12 இல் 08 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான இரண்டு ஏக்கர் சைபர் றூட் பதினெட்டு பேர்ச் பரப்பளவுள்ளதும் ராஜாங்கனை வயல் என அழைக்கப்படுவதுமான பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணித்துண்டு-

வடக்கு : பனக்காணி களக்கால்வாய் ஒதுக்கம் இலக்கம் 10 மற்றும் வயல் காணி இலக்கம் 07 ;
கிழக்கு : பனக்காணி களக்கால்வாய் ஒதுக்கம் இலக்கம் 10 ;
தெற்கு : களக்கால்வாய் ஒதுக்கம் இலக்கம் 43 மற்றும் வயல் காணி இலக்கம் 09 ;
மேற்கு : களக்கால்வாய் இலக்கம் 43 மற்றும் வயல் காணி இலக்கம் 07.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2020, திசெம்பர் 21.

04-194/ 4

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபை எல்லைக்குள் அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பீ. ஜீ. சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1999.06.07 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அனு/ ராஜா/ பி/ 3950 இன் உரித்துக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 06 இல் வசிக்கும் திஸ்ஸாநாயக முதியன்சேலாகே சோமபால என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டக் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 1007 இன் கீழ் 2000.02.07 ஆந் திகதி 373/ 152 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ளபோதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின்கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வுகூறல் இருப்பின் அதுபற்றி 2021.04.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

### அட்டவணை

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் எப்பாவள கோரளே, இல. 448, கிராமசேவை அலுவலரின் பகுதியில் உள்ள வட்டார இலக்கம் 06 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், 439 ஆம் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 741 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 0.383 ஹெக்டயார் பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு (மேட்டு நிலம்)-

வடக்கு : மேட்டு நிலம் இலக்கம் 738 ;
கிழக்கு : குடியேற்ற வீதி ஒதுக்கம் இலக்கம் 739 மற்றும் காணி இலக்கம் 770 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 770 ;
மேற்கு : குடியேற்றத் திட்டப்பாதை ஒதுக்கம் இலக்கம் 730.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்/ காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடைப்பட்ட),
ராஜாங்கனை.

பிரதேச செயலகம்,
ராஜாங்கனை,
2021, மாச்சு 03.

04-194/ 5

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1990, ஒகத்து மாதம் 07 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/ பி/ மஆஏ/ 75 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான மாகஸ்தொட்ட, நுவரெலியா என்னும் முகவரியில் வசிக்கும் பல்லேகெதர கம்மெஹேலாகே சுகததாச என்பவருக்குக் கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நுவ 18/ 233/ 90 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.08.13 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும்

நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.04.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒய பலாத்த பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள 535ஏ, கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாகஸ்தொட்ட என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு - ஆம் இலக்க வெளிக்களத் தாளில் மு. பி. நு. 1008 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட - இரேகை வரைதாளில் 25 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.069 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :

வடக்கு : வீதி மற்றும் துண்டு இலக்கம் 24 ;
கிழக்கு : வீதி ;
தெற்கு : வீதி ;
மேற்கு : வீதி.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2020, திசெம்பர் 28.

04-195

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62743.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : PLC/LG/Galga/L15.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 70, கட்டகடுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கனேதிவுல்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் FVP 3245 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 71 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0608 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரச காணியை மத வழிபாட்டு நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு அல் பலா புதிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 70 மற்றும் 72 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 72 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 72 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 72.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2020.07.15 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட 2020 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

**தவணைப் பணம்**.- இல்லை ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி பள்ளிவாசல் நடத்தும், அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2020.07.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதிக்கப்படும் ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

03. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஏப்பிறல் 09.

04-292

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/58799.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : UPLC/L/12/UP/L/18.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பதுளை மாவட்டம், ஊவா பரணகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 47A, அம்பஸ்தோவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள B/UVP/2016/184 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் 0.0516 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் A ஆம் இலக்க அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஊவபரணகம பிரதேச அபிவிருத்தி வங்கி விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எப்விபி 38 இல் காணித்துண்டுகள் இலக்கங்கள் 420 மற்றும் 194 ;
கிழக்கு : எப்விபி 38 இல் காணித்துண்டுகள் இலக்கங்கள் 194 மற்றும் 18C[1] ;
தெற்கு : எப்விபி 38 இல் காணித்துண்டுகள் இலக்கங்கள் 18C[1] மற்றும் 411 ;
மேற்கு : எப்விபி 38 இல் காணித்துண்டுகள் இலக்கங்கள் 411 மற்றும் 420.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை களுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் 2020.09.12 ஆந் திகதியிலிருந்து 2050.09.11 வரையிலும்) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2020 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் சந்தைப் பெறுமதியில் 2%. குத்தகை செயற்படுத்தப்படும் வருடத்திற்கான விலைமதிப்பீடு ஐந்து மில்லியனுக்கு (ரூ. 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைப் பணம்**.- அறவிடப்பட மாட்டாது ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2020.09.12 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் தவிர்ந்த ஏனைய கீழ்க்குத்தகை மற்றும் கைமாற்றம் செய்தல் மட்டும் அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எல். எம். ஏ. சஞ்ஜீவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஏப்பிறல் 09.

04-193

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/64008.
மாகாணக் காணி ஆணையாளர் இலக்கம் :
NWP/PLC/L9/WW/LTL/29.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 636/1-வனாத்தவில்லுவ தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வனாத்தவில்லுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அரச நில அளவை ஆணையாளர் திரு. டபிள்யூ. சீ. எம். பிரனாந்து அவர்களால் நில அளவை செய்து வரையப்பட்ட பு/வணா/2018/01 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு "ஆ" எனக் காட்டப்பட்டுள்ளதும் 8 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு திசாநாயக்க முதியன்சேலாகே சிரிவர்த்தன அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு "ஆ"

வடக்கு : ஆரம்ப வரைபடம் ஏ 1710 இல் காணித்துண்டு இலக்கம் 215 மற்றும் பாதை ;
கிழக்கு : பாதை மற்றும் ஆரம்ப வரைபடம் ஏ 1710 இல் காணித்துண்டு இலக்கம் 215 ;
தெற்கு : ஆரம்ப வரைபடம் 4743 இல் காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் ஆரம்ப வரைபடம் ஏ 1710 இல் காணித்துண்டு இலக்கம் 215 ;
மேற்கு : ஆரம்ப வரைபடம் ஏ 1710 இல் காணித்துண்டு இலக்கம் 215.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.02.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2021 ஆம் வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

**தவணைப்பணம்**.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்குத் தொகை தவணைப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

**தண்டப் பணம்**.- 2021 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத வர்த்தகப் பெறுமதியின் 10% தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளர் குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(உ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளர் மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2021.02.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங் களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. எம். யு. பி. கே. உடகெதர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஏப்பிறல் 09.

04-191

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/52587.
மாகாணக் காணி ஆணையாளர் இலக்கம் :
பළාත්/ඉකො/ඉ9/මුන්/දී.බ.07.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த முந்தல் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அரச நில அளவை ஆணையாளர் நில அளவை செய்து வரையப்பட்ட பு/முண்/2016/28 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு ''அ'' எனக் காட்டப்பட்டுள்ளதும் 7.4445 ஹெக்டயார் (18ஏ. 01றூ. 23பே.) விஸ்தீரணமுள்ள அரச காணியை இறால் வளர்ப்பு கருத்திட்டம் சம்பந்தமாக கீகியனகே ரஞ்சித் பசில் பிரனாந்து அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு "அ"

வடக்கு : சதுப்பு நிலம் மற்றும் அரச இறால் பண்ணை ;
கிழக்கு : அரச இறால் பண்ணை ;
தெற்கு : முந்தல் களப்பு ஒதுக்கம் ;
மேற்கு : முந்தல் களப்பு ஒதுக்கம்.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2021.02.22 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2021 ஆம் வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் நான்கு வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

**தவணைப்பணம்**.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்குத் தொகை தவணைப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

**தண்டப் பணம்**.- 2021 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத வர்த்தகப் பெறுமதியின் 10% தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி இறால் வளர்ப்பு கருத்திட்டம் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற் காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளர் குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(உ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலாளர், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2021.02.22 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. எம். யூ. பி. கே. உடகெதர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஏப்பிறல் 09.

04-192

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/61850.
ஆணையாளரின் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட)
இல. : அம்/அபநயனபோக/01.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சத்தாதிஸ்ஸபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சத்தாதிஸ்ஸபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 280002 ஆம் இலக்க எல்லை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கங்கள் 609, 610, 611, 612, 613 மற்றும் 0.1881 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஏற்றுமதி விவசாய பயிர்க்கன்று காப்பாளர் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :

| | காணித்துண்டு இலக்கம் 609 | காணித்துண்டு இலக்கம் 610 | காணித்துண்டு இலக்கம் 611 | காணித்துண்டு இலக்கம் 612 | காணித்துண்டு இலக்கம் 612 |
|---|---|---|---|---|---|
| வடக்கு : | 425 மற்றும் 224 | 425 மற்றும் 609 | 425 மற்றும் 610 | 425 மற்றும் 611 | 425 மற்றும் 612 |
| கிழக்கு : | 224 மற்றும் 614 | 609 மற்றும் 614 | 610 மற்றும் 614 | 611 மற்றும் 614 | 612 மற்றும் 614 |
| தெற்கு : | 614 மற்றும் 610 | 614 மற்றும் 611 | 614 மற்றும் 612 | 614 மற்றும் 613 | 614 மற்றும் 625 |
| மேற்கு : | 610 மற்றும் 425 | 611 மற்றும் 425 | 612 மற்றும் 425 | 613 மற்றும் 425 | 425 |

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் குத்தகையை அங்கீகரித்த 2020.07.08 ஆந் திகதி தொடக்கம்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- 2020 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் அங்கீகரிக்கப்படாத பெறுமதி 2%. 2020 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் அங்கீகரிக்கப்படாத பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த குத்தகை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைப் பணம்.**- அறவிடப்பட மாட்டாது ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை செயற்படுத்தப்பட்டுள்ள 2020.07.08 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

சமீர பி. ஹெட்டிஆரச்சி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, ஏப்பிறல் 09.

04-241